விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 044 வள்ளுவர் ஆண்டு 2055 தை 18 வியாழக்கிழமை (01.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை



T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)
நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இலங்கை கனிய வள கூட்டுத் தாபனத்தின் எரிபொருட்களின் விலைத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
இதன்படி ஒக்டேன் 92 15

## பல்கலை மாணவர்கள் அரசுக்கு எதிராக பேரணி

### கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

(கொழும்பு)
வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும், வற் வரியை குறைக்குமாறும் இலவசக்கல்வி வாய்ப்பை மேலும் விரிவுபடுத்த கோரியும் பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
ஆர்ப்பாட்டப் பேரணியை 15

## அறிவு மற்றும் பண்புமிக்க சமூகத்தாலேயே பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்

### ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)
அறிவு மற்றும் பண்புமிக்க சமூகத்தின் ஊடாகவே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
களனி பல்கலைக்கழகத்தின் பாலி மற்றும் பௌத்த பட்டப்படிப்புப் பிரிவின் புதிய கட்டடத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். 15

## மைத்திரி, மகிந்தவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை



(கொழும்பு)
நல்லாட்சி அரசாங்க காலத்தில் பிரதமர் பதவியை வகித்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, அப்பதவியிலிருந்து விலக்கியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவில், சாட்சியமளிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால 15

## அதிகளவான ஹெரோயின்
## இளம் குடும்பஸ்தர் இருபாலையில் மரணம்

(யாழ்ப்பாணம்)
அதிகளவு ஹெரோயினை நுகர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுக்கையிலே மரணமான சம்பவம் ஒன்று இருபாலை தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார். 15

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)
அதிவேகமாக செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் வேலித் தூணுடன்மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயங்களுக்குள்ளான இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
உற்றுப்புலம் கிளிநொச்சியைச் சேர்ந்த மகிலிஸ் அபிசாகிந் (வயது-20) என்ற இளைஞனே 15

## தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை வெகுவிரைவில் நடத்துங்கள்

### கட்சித் தலைவர் சிறீதரனுக்கு சுமந்திரன் கடிதம்

(யாழ்ப்பாணம்)
தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை வெகுவிரைவில் நடத்துமாறு தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரனுக்கு சுமந்திரன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.
குறித்த கடிதத்தில் எமது வரலாற்றில் முதன்முறையாக வாக்கெடுப்பினாலே தெரிவு செய்யப்பட்ட தலைவராகிய நீங்கள் அப்படியான அதற்குகந்த விமர்சையோடு வைபவ ரீதியாக பதவியேற்பது முக்கியமான விடயமாகும்.
"எமது மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் பல வேறு சந்தேகங்களுக் 15

## 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள்

### யாழில் இளைஞன் கைது

(கொழும்பு)
தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் நோக்குடன் உடைமையில் வைத்திருந்த ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்டவரிடமிருந்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் மாநகர எல்லையில் 15

## பணவீக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, 2024 ஜனவரியில் இலங்கையின் பணவீக்கம் 6.4 ஆக உயர்ந்துள்ளதாக, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறி 15

## அமைச்சர் டக்ளஸை சந்தித்த சாந்தனின் தாயார்

### சில தினங்களில் பதில் பெற்றுத் தருவதாக உறுதி



(யாழ்ப்பாணம்)
ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விடுதலையாகிய 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி நாகேஸ்வரி விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம் சிறாம்பியடி ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ்சை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி விக்னேஸ்வரன் அவர்கள் கடந்த 29.01.2024 (திங்கட்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசேகரம் - மங்கையக்கரசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவராசா - நாகரத்தினம் தம்பதியரின் மருமகளும் விக்னேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும் பாலேந்திரனின் பாசமிகு சகோதரியும் சிவரூபன், கரிஹரரூபன், கஜரூபன், சோபனா ஆகியோரின் அன்புத் தாயாரும் சலஜா, சுதர்ணமேனி, அபிராமி, சிவரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இராஜேஸ்வரி, பிரணவஈஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் அபிசேக், அஜய்சேக், விதுசன், விதுசாயினி, விதுசிகன், அக்சயன், அக்சாயினி, அக்சிதன், அபிலாஷ், அக்சயா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.02.2024 திங்கட்கிழமை மதியம் 1.00 மணியளவில் (பிரான்ஸ் நேரம்), 5.30 மணியளவில்(இலங்கை நேரம்) Epinay's Funeral house, 95 rue Marcel sambat 83340 Epinay villetaneuse france இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*தொடர்புகளுக்கு :*
விக்னேஸ்வரன் - 0094773151245
சிவரூபன் - 0014167263826
கரிஹரரூபன் - 004917680257644
கஜரூபன் - 0033695203661
சோபனா - 0014388780541

(18843)

*தகவல்:*
சி.விக்னேஸ்வரன்


**லங்கா மஹால்(PVT) LTD**

உள்நாட்டு. வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1790/=
ஜேர்மனி - 1690/=
கனடா - 2150/=
சுவிஸ் - 1990/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (18850)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்துதரப்படும்.
இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671**9

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு.
**077 8393 974**



**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நகர், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் போன்ற பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

**075 081 2995**

(18848)


## ஊழலில் இலங்கைக்கு 115ஆவது இடம்

Transparency International நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊழல் மிகுந்த நாடுகள் பட்டியலில் இலங்கை 115 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

0 (அதிக ஊழல்) - 100 (ஊழலற்ற நாடு) எனும் அளவில் நாடுகளை மதிப்பீடு செய்து Transparency International நாடுகளை தரப்படுத்துகின்றது.

இந்த பட்டியலில் 180 நாடுகள் தரப்படுத்தப்படுகின்றன.

இந்த பட்டியலுக்கு அமைய, இலங்கை 2023 ஆம் ஆண்டு 115 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் இலங்கை 117 ஆவது இடத்தில் இருந்தது. (ம)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு காணி A9 வீதி முகப்புடன் விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
வட மாகாண சபை 300 மீற்றர்
கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

**076 788 0591 | 077 129 4999**

(18848)



**வேலையாட்கள் தேவை**

கனடாவில் உணவகம் மற்றும் நகைக் கடைகளில் வேலை செய்வதற்கு 5 பெண்கள் தேவைப்படுகின்றனர்.
- வயதெல்லை 30
- குறுகிய காலத்தில் விசா பெற்றுத் தரப்படும்.

தொடர்புகளுக்கு (C-8253)
**Hybrid International hub (pvt) ltd** Jaffna
**021 222 1265,**
**077 815 5920, 076 250 0098**


# மரண அறிவித்தல்



**மண்ணில் : 07.02.1934**
**விண்ணில் : 31.01.2024**

## திருமதி யோகம்மா செல்லப்பாக்கியம்

"செல்ல மஹால்" துன்னாலை மத்தி கரவெட்டி கொள்வெளியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா செல்லப்பாக்கியம் அவர்கள் நேற்று (31.01.2024) புதன்கிழமை அன்று காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாக்கியம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - பசுபதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சோதிமுத்து, கணேசன் (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மா, கருணாவதி (ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர்), விமலநாதன் (B/A-லண்டன்), மதனாவதி (ஆங்கில ஆசிரியை சுவிஸ்), சுலோசனாவதி (வணிகவியல் - லண்டன்), தில்லைநாயகி (B.Com - ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவயோகநாதன், இரவிச்சந்திரன், இராஜேந்திரநாதன், கிருஷ்ணவேணி, அருணாச்சலம், கமலதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சுயாழினி, சிவந்தினி, சுயந்தன் மற்றும் சுபாஜினி, மயூரன் (HNDE ஆங்கில ஆசிரியர் கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), சிவராம், ஸ்ரீராம், கோபிகா, பவன், ராகவராம், சாருகா, ராகுலன், பவன்யா, காமாட்சி, மிதுரா, பிரியங்கா, துவாரகா, பானுகோபன், நேமி கிருஷ்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜஸ்மிதா, அஸ்வன், அஸ்வின், மீரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.02.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேறூண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியால் அதிகரிக்கும் யாசகர்கள்

## சமீபத்திய புள்ளிவிபரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக நகர்ப்புறங்களில் யாசகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சமீபத்திய புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.**

கடந்த 2019 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டளவில் நகர்ப்புறங்களில் யாசகர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளமையை காணமுடிகின்றது.

இலங்கையில் தற்போதைக்கு நிலவும் பொருளாதார நெருக்கடியால் நகர்ப்புறங்களில் யாசகர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கலாம் என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். யாசகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பின் காரணமாக நகர்ப்புற வாசிகள் மட்டுமன்றி நகரங்கள் ஊடாக வாகனங்களில் பயணப் போரும் கடும் தொல்லைகளுக்கு ஆளாக நேரிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5-6)

# கருங்கற்கள் ஏற்றுமதிக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் மேற்பார்வையின் கீழ் அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுக நிர்மாணப் பணியின் போது அகற்றப்பட்ட கருங்கற்களை உடனடியாக ஏற்றுமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மாகம்புர துறைமுக பகுதியின் நிர்வாக கட்டடத்திற்கு அருகாமையிலும் அம்பாந்தோட்டை புதிய வைத்தியசாலை வளாகத்திலும் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன.

சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மில்லியன் மெற்றிக்தொன் வரையிலான கற்களை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்க குழுவினை நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கருங்கல் ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டுகின்ற வேலைத்திட்டமொன்றை குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்த இந்த திட்டம் பொருத்தமான தெனவும் கண்டறியப்பட்டுள்ளது. (நி-5-6)

# வீதியிலிறங்கி போராடுவது வீண் செயல் என்கிறார் பந்துல



(கொழும்பு)

வற் வரியை குறைக்குமாறு கோரி வீதியில் இறங்கி போராட்டம் நடத்துவது வீண் செயலென அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் குழுக்கள் அவ்வாறு செய்யாமல் பொருத்தமான மாற்று வழிகளை முன்வைக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களிடம் இருந்து அறவிடப்படும் வரிப்பணம் அத்தியாவசிய கொடுப்பனவுகள் மற்றும் அரச ஊழியர்களுக்கான சம்பளம் உள்ளிட்ட செலவுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# ஊழல் மோசடிகள் அற்ற நாடுகளில் பின்னடைவை சந்தித்துள்ள இலங்கை

(கொழும்பு)

உலகில் ஊழல் மோசடிகள அற்ற நாடுகள் தொடர்பிலான பட்டியலில் இலங்கை பின்னடைவை சந்தித்துள்ளது.

ஊழல் மோசடிகளற்ற நாடுகளின் வரிசையில் இலங்கை 115ஆம் இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊழல் மோசடிகளற்ற நாடுகள் தொடர்பிலான மதிப்பாய்வு புள்ளிகளாக இலங்கைக்கு 34 புள்ளிகள் மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன.

கடந்த 2022ஆம் ஆண்டை விடவும் 2023ஆம் ஆண்டில் இரண்டு நிலைகள் பின்தள்ளப்பட்டுள்ளன.

கடன் சுமை மற்றும் அரசியல் ஸ்திரமற்றதன்மைகளினால் இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளும் இந்த பட்டியலில் பின்னிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஊழல் மோசடிகளற்ற நாடுகளின் வரிசையில் டென்மார்க் முதல் இடத்தையும் பின்லாந்து இரண்டாம் இடத்தையும் நியூசிலாந்து மூன்றாம் இடத்தையும் வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகளவு ஊழல் மோசடிகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் சோமாலியா முன்னணி வகிக்கின்றது. (நி-5-6)

# புதிய இராஜாங்க அமைச்சராக சஷீந்திர ராஜபக்ஷ நியமனம்



(கொழும்பு)

நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராக சஷீந்திர ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தார். இதேவேளை விபத்தில் உயிரிழந்த சனத் நிஷாந்த நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்திருந்த நிலையிலேயே தற்போது அந்த இராஜாங்க அமைச்சுப் பதவியை ஷசீந்திர ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# லொறி-பேருந்து விபத்து வெளிநாட்டவர்கள் பலி

(கொழும்பு)

மாத்தறை - கொழும்பு வீதியின் மிதிகம பிரதேசத்தில் பேருந்து-லொறி மோதி இடம்பெற்ற விபத்தில் வெளிநாட்டுப் பிரஜைகள் இருவர் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பேருந்து மற்றும் லொறியின் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இருவரில் ஒருவர் ரஷ்யப் பிரஜை என தெரியவந்துள்ளது. (நி-5-6)

# கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தரும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என இலங்கை துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்த வருடத்தின் முதல் 29 நாட்களில் 330இற்கும் அதிகமான கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

கடந்த வருடத்தை ஒப்பிடுகையில் 60.9 வீதத்தால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த ஆண்டின் டிசெம்பர் மாதத்தை விட நடப்பாண்டின் ஜனவரியில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதல் 28 நாட்களில் மட்டும் 189,574 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். தினசரி சுற்றுலாப் பயணிகளின் வருகை சுமார் 6,770 அளவில் பதிவாகியுள்ளது.

அதன் பிரகாரம், ஜனவரி இறுதிக்குள் சுமார் 210,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த டிசம்பரில் 210,351 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். அதனுடன் ஒப்பிடுகையில் இம்மாதம் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (நி-5-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



திருமதி.கந்ததர்சினி பத்மராஜா



திருமதி.நாகேஸ்வரி விக்னேஸ்வரன்



திரு.செல்வராசா ஞானேசன்

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றைய தினம் (31.01.2024) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப் பட்டத்தினை பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி.பத்மராஜா கந்ததர்சினி, திருமதி.விக்னேஸ்வரன் நாகேஸ்வரி, திரு.செல்வராசா ஞானேசன் ஆகியோரை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று சமூகத்திற்கு சேவையாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர் -ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம். (18844)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்க உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்


சிவானந்தா

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் உதைபந்தாட்ட தொடரில் கீரிமலை சிவானந்தா மற்றும் நாவாந்துறை சென்மேரிஸ் அணிகள் அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வடமாகாண ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதை பந்தாட்ட தொடர் உரு ம்பிராய் இந்துக் கல்லூரி மைதான த்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் கீரிமலை சிவானந்தா அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் இரு அணிகளும் 3:3 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மா னிக்கப்பட்டது. இதில் கீரிமலை சிவானந்தா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து தேவரையாளி யங்லயன்ஸ் அணி மோதியது. இதில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்மேரிஸ் அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-90)


சென்மேரிஸ்

# சக்திவேல் சீசன்-2 இறுதிப்போட்டி வெற்றிவாகை சூடியது தமிழ் வேல்


சக்திவேல் சீசன்-2 இறுதிப் போட்டியில் தமிழ்வேல் அணி வெற்றிவாகை சூடிக்கொண்டது.

வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்திய உள்ளக போட்டித் தொடரான சக்திவேல் சீசன்- 2 இன் இறுதிப் போட்டி சக்திவேல் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இறுதிப் போட்டியில் செவ்வேல் அணியை எதிர்த்து தமிழ்வேல் அணி மோதியது. விறு விறுப்பாக இடம்பெற்ற போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில் இறுதி முடிவு தண்டை உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதில் தமிழ்வேல் அணி வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கியது.

முதலாவது இடத்தை பெற்றுக் கொண்ட அணியினருக்கு 15,000/-ரூபா பணமும் கேடயமும் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட அணியினருக்கு 10,000/- பணமும் கேடயமும் வழங்கி வைக்கப்பட்டன. (நி-5-6-60)

# 'யாழின் நாயகன்' உதைபந்தாட்ட தொடர் சமரபாகு, அச்செழு அடுத்த சுற்றுக்குத் தகுதி





யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடரில் சமரபாகு நியூட்டன், அச்செழு வளர்மதி அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் அணியை எதிர்த்து [illegible] அணி மோதியது. இதில் சமரபாகு நியூட்டன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளதுடன் இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து ஏ.எல். அணி மோதியது. இதில் அச்செழு வளர்மதி அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

### பதிவு இலக்கம்- PA 52-18.03.1972

**பதவி வெற்றிடங்கள்**

- பதவி :- பொதுமுகாமையாளர்
  சம்பள குறியீட்டு இலக்கம் :- 101/08
  சம்பள அளவுத்திட்டம் :- 20665-260x10-280x10-26065

(02/2022 இற்கு அமைய கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

(அ) கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/மேற்பார்வை நிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/மேற்பார்வை நிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம்/அதற்கு சமனான தகைமை. இத்தகைமையானது கணக்கியல்/வியாபார புள்ளிவிபரவியல்/வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்./

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/முகாமைத்துவம்/வர்த்தகம் தொடர்பான உயர் டிப்ளோமா சித்தி.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைநிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/

கா.பொ.த உயர்தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலை பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

- பதவி :- எழுதுநர்
  சம்பள குறியீட்டு இலக்கம் :- 302/14
  சம்பள அளவுத்திட்டம் :- 17900-155x10-165x10-21100

**(02/2022 இற்கு அமைய கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதரபடிகளும் வழங்கப்படும்)**

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுநர்/ காசாளர் /கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. / க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் /தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

**மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான பொதுவான நியந்தனைகள்**

1. பதவிக்கேற்ப பிணைப்பணம் அறவிடப்படும்.
2. வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டது.)
3. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்படும்.
4. கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபாரிசு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
5. சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தேசிய அ.அ.இல, பிறந்த திகதி, தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு கல்விச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ் பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
7. விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.
8. விண்ணப்பங்கள் **தலைவர், பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, பளை** எனும் முகவரிக்கு எதிர்வரும் 15.02.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
9. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

(சி-8251)

**க.இராசதுரை, தலைவர், பளை ப.தெ.வ.அ.கூ. சங்கம்.**

## INVITATION FOR BIDS(IFB)
## TEACHING HOSPITAL, JAFFNA

**பொருட்களிற்கான விலைமனுக்கோரல்**

போதனா வைத்தியசாலையின் பெறுகைக்குழு கடந்த 22.01.2024 அன்று Daily news, Dinakaran மற்றும் Dinamina ஆகிய பத்திரிகைகளில் வெளியிட்ட கேட்புமனு விளம்பரத்தில் கோரப்பட்ட பொருட்கள் தொடர்பான கொள்ளலில் வட பகுதி வர்த்தகர்களும் பங்கேற்குமாறு இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம். (இதனை எமது வைத்தியசாலையின் வலைத்தளத்திலும் பார்வையிடலாம். - www.thjaffna.lk)

**பணிப்பாளர்/தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு,**

(சி-8252)

# யாழ். பல்கலையில் கிறிஸ்தவ கற்கைகளின் ஆய்வு மாநாடு

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


யாழ். பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவக் கற்கைகளில் இரண்டாவது அனைத்துலக ஆய்வு மாநாடு இன்று ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பீடத்தில் கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப் பட்டத்தை வழங்கி வரும் கிறிஸ்தவ நாகரிகத்துறை, பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலைப்பின்னலோடு இணைந்து 'சவால்மிக்க காலங்களில் சமயங்களின் பங்கு' என்னும் மையப் பொருளில் இடம்பெறவுள்ளது. இவ் மாநாடு நாளையும் நடைபெறவுள்ளது.

'கிறிஸ்தவக் கற்கைகளில் முதலாவது அனைத்துலக ஆய்வு மாநாடு யாழ். பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத் துறையால், யாழ் . திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையோடு கடந்த 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# 80 கட்டாக்காலி மாடுகள் வவு.நகரசபையினரால் பிடிப்பு

(வவுனியா)



வவுனியா நகரசபையினால் வீதிகளில் நடமாடித்திரிந்த 80 கட்டாக்காலி மாடுகள் நேற்று முன்தினம் பிடிக்கப்பட்டன.

வவுனியா நகர எல்லைக்குட்பட்ட வீதிகளில் இரவு மற்றும் பகல் வேளைகளில் நடமாடும் கால்நடைகளால் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதிகளில் பொதுப்போக்குவரத்துக்கு இடையூறாக நின்ற 80 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் நகர சபையினரால் பிடிக்கப்பட்டு சபையின் பாராமரிப்பில் உள்ளது.

எனவே, கால்நடை உரிமையாளர்கள் தமது கால் நடைகளுக்குரிய அடையாளத்தினை உறுதிப்படுத்திய பின் தண்டப் பணத்தினைச் செலுத்தி அவற்றை மீளப்பெற்றுச்செல்லுமாறு சபையினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும்10 நாட்களுக்குள் உரிமை கோரப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர சபை அறிவித்துள்ளது. (நி-5-6)




First Capital மற்றும் HNB கைகோர்த்து நம்பிக்கை அலகு முதலீட்டாளர்களுக்கு புரட்சிகரமான டிஜிட்டல் பண மீளப்பெறல் மற்றும் கொடுப்பனவு வசதியை நாடளாவிய ரீதியில் அறிமுகம் செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பண்பாட்டு பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய யாழ்.மாவட்ட பண்பாட்டு விழா நேற்று முன்தினம் ராஜா கிறீம் ஹவுஸின் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதோடு கலைஞர்களும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (படம்-சிவசாந்தன்)

## வடக்கு மாகாண

# கடற்றொழில் அபிவிருத்திக்கு ரூ.500 மில்லியன் ஒதுக்கீடு

(முறிகண்டி)

**வடக்கு மாகாணத்தில் கடற்றொழில் அபிவிருத்திக்கு ரூ. 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



நேற்று இடம்பெற்ற கரைச்சி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

கடற்றொழில் அபிவிருத்திக்காக வடமாகாணத்திற்கு ரூ. 500 மில்லியன் நிதியை அமைச்சு ஊடாக ஜனாதிபதி வழங்கியுள்ளதுடன் மேலதிக நிதி வழங்க அவர் இணக்கம் தெரிவித்தும் உள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு இவ்வருடம் ரூ. 80 மில்லியன் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. குறிப்பாக பெரும் பகுதி நிதி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடுகளை முறையாகக் கையாள்வதற்கு அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார். (நி-5-6-100-316)

# நவீன விவசாய முறைகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வு

## வட மாகாண விவசாய பணிப்பாளர்

(கண்டாவளை)

நெற்செய்கையில் பீடை தாக்கங்களால் ஏற்படும் அழிவுகள் தொடர்பில் அதனை இயற்கை அழிவாக கருதி எதிர் காலத்தில் இழப்பீடுகளை வழங்க முடியுமா? என ஆராய்ந்து வருவதாக வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி சு. செந்தில்குமரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு தேராவில் விவசாய பண்ணையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அறுவடை விழாவில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் காலபோகத்தில் வெள்ளப்பெருக்கு,வறட்சி என்பவற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்புறுதி திட்டம் ஏற்கனவே காணப்படுகிறது.

இது தவிர பீடைத்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்கனவே காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு மாத்திரமே அதற்கான இழப்பீடு பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் எதிர்காலத்தில் இதனை ஒரு இயற்கை அழிவாக கருதி இவர்களுக்கு [illegible] இழப்பீட்டை பெற்றுக் கொடுப்பது எவ்வாறு சாத்தியமாகும் என்பது பற்றி யோசித்து வருகின்றோம்.

நீர்ப்பற்றாக்குறை, வெப்பநிலை அதிகரிப்பு என்பவற்றை சமாளித்து விவசாய செய்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் நவீன விவசாய முறைகளை எதிர் காலத்தில் இவ்வாறான பண்ணைகளிலும் முன்னெடுப்பதுடன் விவசாயிகள் மத்தியிலும் முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் என மேலும் தெரிவித்தார்.

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட இவ்வருடத்தின் முதலாவது மாகாண தொடர் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்ற நிலையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் சென்மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீசியன் அணி மோதவுள்ளது. (நி-5-6-90)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்ற நிலையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு புங்குடுதீவு சன்ஸ்ரார் அணியை எதிர்த்து மகாத்மா அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு யங்யென்ஸ் அணியை எதிர்த்து ஒலிம்பிக் அணியும் மோதவுள்ளன. (நி-5-6-90)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 500 | 400 | 485 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 | 175 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1100 | 1400 | 1205 |
| தக்காளி | 800 | 700 | 750 | 800 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 150 | 150 | 110 |
| கோவா | 700 | 600 | 700 | 800 | 580 |
| கரட் | 1600 | 1000 | 1900 | 1600 | 1600 |
| பூசணி | 180 | 200 | 180 | 250 | 185 |
| புடோல் | 300 | 300 | 300 | 400 | 250 |
| வாழைக்காய் | 250 | 250 | 240 | 300 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 300 | 350 | 400 | 400 | 400 |
| பாகற்காய் | 800 | 700 | 700 | 800 | 695 |
| வெண்டக்காய் | 650 | 750 | 300 | 600 | 480 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 100 |
| பயற்றங்காய் | 600 | 500 | 600 | 600 | 600 |
| லீக்ஸ் | 450 | 450 | 600 | 600 | 450 |
| பீற்றூட் | 800 | 600 | 800 | 700 | 750 |
| கறிமிளகாய் | 900 | 800 | 800 | 1200 | 900 |
| முருங்கைக்காய் | -- | -- | 2400 | -- | 2500 |
| போஞ்சி | 600 | 550 | 600 | 800 | 550 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 700 | 380 | -- |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 100 | 80 | 70 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-110 | 85-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 450 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 500 | 270 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 | 140 |
| வல்லாரை | 80 | 50 | 50 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி விற்பனைக்கு

நிலாவரை அச்சுவேலி றோட்டில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(18842)

தொடர்புகளுக்கு

077 019 4611


## ஐக்கிய நாடுகள் சபையின்
# உணவு மற்றும் விவசாயக்குழு நாட்டிற்கு வருகை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிராந்திய அலுவலகத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்திய மாநாட்டின் 37 ஆவது அமர்வின் முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்காக குறித்த குழு வருகைதந்துள்ளது.

குறித்த மாநாடு பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதேவேளை உணவு மற்றும் விவசாயம் தொடர்பான சவால்கள் மற்றும் முன்னுரிமைகள் குறித்து விவாதிப்பதும் பிராந்திய ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதுமே ஆசிய பசுபிக் பிராந்திய மாநாட்டின் பிரதான நோக்கமாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)





"Ammanai Saran Adainthal Athika Varamperalam"

SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5 Chapel Road, London W13 9AE. Phone:0208 810 0835

Founded:10.08.1991 charity No:1014409

www.ammanealing.org Email: info@ammanealing.org









எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின்அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

(REF:SKTAT21/03/24)

**பணிநிலை 1 மஹோற்சவ சிவாச்சாரியார்**
**(Hindu religious workers with non-pastoral role)**

**தகைமைகள்:** விண்ணப்பதாரி மஹோற்சவ குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.

**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் மஹோற்சவ பூசைகள் செய்தல்.

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளைக் கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிட்டு வழங்கப்படும்.

**பணிநிலை 2 ஆலய சிவாச்சாரியார்**
**(Hindu religious workers with non-pastoral role)**

**தகைமைகள்:** விண்ணப்பதாரி ஆலய குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.

**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.

**பணிநிலை 3 நாதஸ்வர, தவில் கலைஞர்கள்**
**(Hindu religious (Musicians) Workers)**

**தகைமைகள்:** நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்தில் இருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்க வேண்டும்.

**கடமை:** ஆலய பூசைக் காலங்களில் மங்கள இசை இசைத்தல்.

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 01.03.2024 (01 March 2024)** (18841)


# இராசிபலன்

01.02.2024
தை 18, வியாழக்கிழமை
சஷ்டி முற்பகல் 11.21 மணிவரை

சித்திரை பின்னிரவு 1.04 மணிவரை
சுபநேரம் -8.06-9.36 மணிவரை
இராகுகாலம்-2.06-3.36 மணிவரை

சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி.

**வளவன்**


மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், காரிய அனுகூலமுண்டு.


ரிஷபம்

உள்ளம் மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.


மிதுனம்

உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், பிரியமான சிலரும் மனம் விட்டுப் பேசுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


கடகம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்கள் கைகூடும்.


சிம்மம்

உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், போசன நன்மையுண்டு.


கன்னி

குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு, சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.


துலாம்

பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


விருச்சிகம்

எடுத்த காரியங்களை நிறைவு செய்ய அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், தேவையற்ற மனக்குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது, சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.


தனுசு

இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.


மகரம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.


கும்பம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.


மீனம்

எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை.

**பூமியைப் போன்று பொறுமை வேண்டும் அதுதான் நல்லது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மருத்துவர், தாதி போல் வேடமிட்டு ஹமாஸ் தளபதிகள் மீது இஸ்ரேல் தாக்குதல்



(காசா)

மருத்துவர், தாதியர், நோயாளி போல மாறு வேடத்தில் இஸ்ரேல் சிறப்பு படையினர் மருத்துவமனைக்குள் அதிரடியாக நுழைந்து மூன்று ஹமாஸ் அமைப்பினரை சுட்டுக் கொல்லும் காணொளி சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

மேற்குக் கரையின் ஜெனின் நகரில் உள்ள இபென் சினா மருத்துவ மனையில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் முக்கிய தளபதி மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாக இஸ்ரேல் படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து மருத்துவர், தாதி, நோயாளி என வேடமணிந்த இஸ்ரேல் சிறப்பு படையினர் அதிரடியாக மருத்துவமனைக்குள் நுழைந்தனர்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த ஹமாஸ் ஆயுதக் குழுவின் தளபதி முகமது ஜலாம்நிஹ், பாலஸ்தீனிய இஸ்லாமிக் ஜிகாத் ஆயுதக்குழுவை சேர்ந்த பசில் அய்மென் அல் குவாசி, முகமது ஆகிய 3 பேரையும் மாறுவேடத்தில் வந்த இஸ்ரேல் சிறப்புப் படையினர் சுட்டு வீழ்த்தினர்.

இந்த சம்பவம் மருத்துவமனையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இஸ்ரேல் படையின் அதிரடி நடவடிக்கை தொடர்பான காணொளி தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. (நி-5-6)

## இம்ரானுக்கும் மனைவிக்கும் 14 வருட சிறைத் தண்டனை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானிற்கும் அவரது மனைவி புஸ்ரா பீபிக்கும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் 14 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மற்றுமொரு வழக்கில் இம்ரான்கானிற்கு 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையிலேயே நேற்று இந்த தீர்ப்பு வெளியாகியுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பிலேயே இம்ரான் கானிற்கும் அவரது மனைவிக்கும் நீதிமன்றம் இந்த தண்டனையை வழங்கியுள்ளது.

அரசாங்கத்திற்கு சொந்தமான பரிசுப்பொருட்களை தங்களது சொத்துக்களாக கருதி விற்பனை செய்தனர் என குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தது.

பாகிஸ்தானின் பாராளுமன்ற தேர்தல் இன்னமும் ஒரு வாரகாலத்தில் இடம்பெறவுள்ள நிலையில், இம்ரான் தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## இம்ரா... போரா...

➤ 4 பேர் உ...

➤ 20 பேர் ...

(இஸ்லாமாபாத்) ...
பாகிஸ்தானில் இ...
ஆண்டு சிறைத்தன...
தானில் நடந்த போரா...
சம்பவத்தில் 4 பேர்...
படுகாயமடைந்துள்ள...

பாகிஸ்தானின் பிரதான கட்சியான பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவராக மாஜி கிரிக்கெட் அணி கப்டனும் முன்னாள் பிரதமருமான இம்ரான்கான் பதவி வகித்து வந்தார்.

இவர் தனது பதவி காலத்தில் அரச ரகசியங்களை வெளிப்...

படு... சில... நீத... தது...

தா... கட்... தா... டத்...

## சீனாவில் 5.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

(பீஜிங்)

சீனாவில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்த நாட்டின் நிலநடுக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் அந்த ஆய்வு மையம் மேலும் தெரிவிக்கையில்,

ஜின்ஜியாங் உய்கர் தன்னாட்சிப் பிரதேசம், அக்கி மாவட்டத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

அட்சரேகைக்கு 41.15 டிகிரி வடக்கிலும் தீக்கரேகைக்கு 78.67 டிகிரி கிழக்கிலும் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 5.7 அலகுகளாகப் பதிவானது.

அத்துடன் பூமிக்குக் கீழே 10 கி.மீ ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் அந்த ஆய்வு மையம் தெரிவித்தது. (நி-5-6)



## மீண்டும் ஏவுகணைப் பரிசோதனை மேற்கொண்ட வடகொரியா

### கொரிய தீபகற்பத்தில் பதற்றம்

(பியாங்யாங்)

வடகொரியா கடந்த மாதத்தில் 3 ஆவது முறையாக மீண்டும் ஏவுகணைகளை வீசி பரிசோதனை செய்துள்ளது.

கொரிய தீபகற்பத்தில் போர்பதற்றத்தை உருவாக்கும் முயற்சியில் வடகொரியா ஈடுபட்டு வருவது அதன் அண்மைக்கால செயற்பாட்டில் உறுதியாக தெரிவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி கடந்த மாதத்தில் 3 ஆவது முறையாக நேற்று முன்தினம் வடகொரியா ஏவுகணைகளை வீசி மீண்டும் சோதனை நடத்தியுள்ளது.

இது குறித்து தென்கொரிய முப்படை தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடகொரியா தனது தெற்கு கடலோரப் பகுதியில் இருந்து ஒன்றுக்கு மேற்பட்ட ஏவுகணைகளை வீசி நேற்று முன்தினம் சோதித்துப் பார்த்தது.

கடல் பகுதியில் வீசப்பட்ட ஏவுகணைகளின் ரகங்கள் உள்ளிட்ட கூடுதல் விபரங்களை சேகரித்து வருகிறோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1950-1953ஆம் ஆண்டின் கொரிய போருக்குப் பிறகு அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து அவ்வப்போது கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இது, தங்களது நாட்டின் மீது போர் தொடுப்பதற்கான ஒத்திகை என்று வடகொரியா கருதுகிறது.

அத்தகைய பயிற்சிகள் நடந்தால் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் வடகொரியா ஏவுகணைகளை வீசி சோதித்து வருகிறது.

இந்தச் சூழலில், அமெரிக்காவுடன் தென்கொரியாவும் ஜப்பானும் இணைந்து அண்மையில் நடத்திய கூட்டு இராணுவப் பயிற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து வடகொரியா இந்த ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. (நி-5-6)



## வட... கு...



(காத்...
வட...
சரமாரி...
சூடு ந...
பேர்...
ளதுட...
மேற்ப...
டைந்த...
வட...
களான...
தெற்கு...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ரானின் ஆதரவாளர்களின் ...ராட்டத்தில் குண்டு வெடிப்பு

## ... உயிரிழப்பு

## ...பர் படுகாயம்



(...த்)

**...ல் இம்ரான்கானுக்கு வழுங்கப்பட்ட 10 ...த்தண்டனையை கண்டித்து பலுசிஸ் ...போராட்டத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு ... பேர் உயிரிழந்துள்ளதுடன் 20 பேர் ...துள்ளனர்.**

படுத்திய வழக்கில் 10 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இதை கண்டித்து பாகிஸ்தான் தெஹ்ரிக் -இ- இன்சாப் கட்சி ஆதரவாளர்கள் பலுசிஸ்தான் மாகாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் பாகிஸ்தான் தெஹ்ரிக் -இ- இன்சாப் கட்சியைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனை தொடர்ந்து அங்கு வன்முறை சம்பவங்களால் பதற்ற நிலை அதிகரித்துள்ளது.

பாகிஸ்தான் பாராளுமன்றத்திற்கு இம்மாதம் பொதுத் தேர்தல் நடக்க உள்ள நிலையில் இம்ரான் கானுக்கு விதிக்கப்பட்ட தண்டனையால் கடும் சர்ச்சை எழுந்துள்ளது. (நி-5-6)

# வடஆபிரிக்காவில் துப்பாக்கிச்சூடு குழந்தைகள் உட்பட 54 பேர் பலி

## ஐ.நா சபை கடும் கண்டனம்



(காத்தூம்)

வடஆபிரிக்க நாட்டில் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 54 பேர் உயிரிழந்துள்ளதுடன் 60 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

வடஆபிரிக்க நாடுகளான சூடான் மற்றும் தெற்கு சூடான் எல்லையில் அமைந்துள்ள எண்ணெய் வளம் கொண்ட அபேயில் ஆதிக்கம் செலுத்த இரு நாடுகளும் விரும்புகின்றன.

கடந்த 2011 இல் சூடானில் இருந்து தெற்கு சூடான் சுதந்திரம் பெற்ற பின்பும் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை.

இவ்வாறான நிலையில், கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு ஆயுதங்களுடன் நுழைந்த நபர்கள் சிலர் கிராம மக்கள் மீது துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் ஐ.நாவின் பாதுகாப்புப் படை வீரர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 54 பேர் பலியாகியுள்ளனர். 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்திற்கு ஐ.நா சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# சீனாவின் ஆதிக்கத்தைக் கண்டு இந்தியா ஒருபோதும் அஞ்சாது

## இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர்

(டில்லி)

"இந்தியாவுக்கு பெரும் சவாலாக மாறியுள்ள சீனாவை கண்டு நாம் பயப்படமாட்டோம்" என இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். மும்பையில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் மாணவர்களுடன் உரையாடிய ஜெய்சங்கர், கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர், இந்தியாவுக்கு பெரும் சவாலாக மாறியுள்ள சீனா, பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் தன்னை பலப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக, தெற்காசியாவில் தனது செல்வாக்கை உயர்த்தி கொள்வதில் மும்முரமாக செயற்பட்டு வருகிறது. பாகிஸ்தான், இலங்கை வரிசையில் மாலைதீவு அரசுடன் நெருக்கமான உறவை சீனா பேணி வருகிறது.

இது, இந்தியாவுக்கு பெரும் தலைவலியாக மாறியுள்ள நிலையில், புதிய மாலைதீவு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு புதிய சிக்கலை உண்டாக்கியுள்ளது.

மாலைதீவில் உள்ள இந்திய ராணுவத்தை வெளியேற்ற காலக்கெடு விதித்ததில் இருந்து இந்தியா விற்கு எதிராக மாலைதீவு அமைச்சர்கள் கருத்து தெரிவித்தது வரை தொடர் பதற்றம் நீடித்து வருகிறது.

மாலைதீவு தலைநகர் மாலேவை நோக்கி சீன கப்பல் சியாங் யாங் ஹாங் 3 சென்றதாக கூறப்படுகிறது. இது, இந்திய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இந்தியாவின் அண்டை நாடுகளில் சீனா ஆதிக்கம் செலுத்தும் என்பதை ஒப்புக்கொள்வது அவசியம். ஆனால், இம்மாதிரியான அரசியலை கண்டு இந்தியா பயப்படக்கூடாது.

சீனா நேராக போரிட்டால் நாம் பயப்படாமல் எதிர்கொள்ளலாம். ஆனால் இந்த குள்ளநரி சீனா, கொரோனா போன்ற கொடிய வைரஸ்களை கண்டுபிடித்து, அதை பரப்பி நம்மை கொல்ல நினைக்கின்றன. அதையும் நாம் திறமையாக எதிர்கொண்டோம். தடுப்பூசி கண்டு பிடித்து உயிர்பலிகளை தடுத்தோம். இப்பொழுது புதிதாக சீனா, செயற்கையாக இயற்கை பேரிடர் உருவாக்கி, இந்திய பகுதிகளில் அதிக மழை பெய்வித்து, வெள்ளம் ஏற்படுத்தி, இந்தியாவை அழிக்க சதிசெய்ய நினைக்கின்றது.

அதையும் நாம் திறமையாக எதிர் கொள்வோம். சீனாவை கண்டு நாம் பயப்படவேண்டாம். நாம் மிக மிக பயப்படவேண்டியது நம் நாட்டில் உள்ள தேச துரோகிகளை கண்டு தான். அவர்கள்தான் நமக்கு பெரிய எதிரி என தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதியின் பொறுப்பற்ற செயலால் நடுவீதியில் தவித்த பயணிகள்



(திருமலை)

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி சென்று கொண்டிருந்த அரச பேருந்தில் எரிபொருள் இன்மையால் பேருந்து நடுவீதியில் நிறுத்தப்பட்டதையடுத்து பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை நான்கு பதினைந்து மணிக்கு புறப்பட்ட பேருந்து இரவு 8. 10 மணியளவில் ஹொரவ் பொத்தானை பிரதேசத்தில் உள்ள யான் ஓயா பகுதியில் எரிபொருள் இன்மையால் நின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் பேருந்தை செலுத்தும் முன்னரே முன்னாயத்தங்கள் செய்திருக்க வேண்டும் எனவும் பயணிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

பேருந்தில் வந்த பயணிகள் பல தடவைகள் சாரதி மற்றும் நடத்துநரிடம் டீசல் வாங்கி தருவதாக கூறி இருந்த போதும் முகாமையாளர் அனுமதி தராத பட்சத்தில் டீசல் ஊற்ற முடியாது என தெரிவித்த போது ஆத்திரமடைந்த பயணிகள் இரு பக்க வீதியையும் மறித்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனை அடுத்து சுமார் மூன்று மணித்தியாலத்தின் பின் திருகோணமலையிலிருந்து எரிபொருள் கொண்டுவரப்பட்டு பின் பேருந்து செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

## விலை அதிகரிப்பால் குறைவடைந்த பழவிற்பனை

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில நாட்களாகவே அனைத்து பொருளாதார நிலையங்களிலும் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றது.

மரக்கறி விலைக்கு ஏற்றவாறு அனைத்து வகையான பழங்களின் விலையும் உயர்ந்துள்ளதாக நுவரெலியா பழங்கள் மொத்த வியாபாரிகள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதங்களில் பெய்த மழை காரணமாகவும் இறக்குமதிச் செலவு உயர்ந்துள்ளதால் பழங்களின் விலை அதிகரித்துள்ளதாகப் பழவிற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் பழங்களின் விலை உயர்வால் விற்பனை குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.(நி-5-6)

## திடீர் மழையால் நெல் அறுவடை பாதிப்பு

### விவசாயிகள் கவலை

(சாவகச்சேரி)

காலபோக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் நேற்று பெய்த திடீர் கன மழை நெற் செய்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என விசாயிகள் கவலை தெவித்தனர்.

இவ்வருட காலபோக நெற்செய்கையில் நெற் பயிரில் ஏற்பட்ட நோய்த் தாக்கம், மருந்துகளின் விலை ஏற்றம் மற்றும் மழை வெள்ளம் காரணமாக பாதிப்பை எதிர்கொண்ட நெற் செய்கையாளர்கள் தற்போது அறுவடை காலத்தில் நேற்று பரவலாக பொழிந்த கனமழையால் மேலும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

அறுவடைக்கு தயாராக இருந்த நெற் பயிர்கள் மழை வெள்ளத்தில் வீழ்ந்து அழிவடைவதுடன், அறுவடை செய்த நெல்லை உலர்த்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (நி-5-6-30)

## இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தை அங்கீகரிக்க வேண்டாம்-சபாநாயகருக்கு கடிதம்

(கொழும்பு)

அண்மையில் நிறைவேற்றப்பட்ட சர்ச்சைக்குரிய இணையவழி பாதுகாப்புச் சட்டமூலம், உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளை முழுமையாக உள்ளடக்கியிருக்கின்றதா என்பதைச் சரிபார்க்காமல், அதனை அங்கீகரிக்க வேண்டாம் என ஊடகங்களும் சிவில் சமூக அமைப்புகளும் பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

ஊடகங்கள், சிவில் சமூகம் மற்றும் ஒடுக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராக எழுச்சி பெறும் தொழிற்சங்கக் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து சபாநாயகருக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

அந்த கடிதத்தில் "கருத்துச் சுதந்திரத்திற்கு முற்றிலும் ஆபத்தை ஏற்படுத்தும்" உத்தேச சட்டத்தை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்று அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

உயர்நீதிமன்றின் உத்தரவுகளை கருத்திற்கொள்ளாமல், இந்த யோசனை, பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

குறித்த யோசனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 45 அடிப்படை உரிமை மனுக்களின் பதிவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு உயர்நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பித்திருந்தது.

இந்தநிலையில் நீதிமன்ற உத்தரவு கடைப்பிடிக்கப்படாமை, அரசியலமைப்பை தெளிவாக மீறுகின்ற செயலாகும். அத்துடன் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என்றும் ஊடகங்களும் சிவில் சமூக அமைப்புகளும் சுட்டிக்காட்டியுள்ளன.

வரவிருக்கும் தேர்தலுக்கு முன்னதாக அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பை எதிர்கொள்ளவே இணையவழி பாதுகாப்பு யோசனையை அவசரமாக சட்டமாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது தெளிவாகிறது.

இந்தநிலையில், நிறைவேற்றப்பட்டுள்ள குறித்த யோசனையில் தனது கையெழுத்தை இடுவதற்கு முன், உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் திருத்தங்கள் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதை சபாநாயகர் உறுதி செய்ய வேண்டும் என்று அந்த அமைப்புகள் கோரியுள்ளன. (நி-5-6)

## இன்று ஒரு தகவல் 23



தென்கச்சி கோசுவாமிநாதன்

# நட்பு

ஆழம் தெரியாமல் காலை விடுறதும் தப்பு. ஆராயாமல் நட்பு செய்யிறதும் தப்பு.

நட்பென்னா ஏதோ திடீர்னு வந்திடுற ஒன்று இல்லை! இந்தக் காலத்திலே அப்படி திடீர்னு நட்பு வந்திடுறதை நாம பார்க்கலாம். அது நட்பு இல்லை! நாடகம்! தனியா இருக்கிறப்போ ஒருத்தரை ஒருத்தன் திட்டிக் கொண்டே இருப்பான்!

நேரில கண்டுட்டா... நெடுநாளா தவிச்சிக்கிட்டு இருந்தவன் மாதிரி ஓடிப்போய் கட்டிப் பிடிப்பான்!

பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும் மறுபடியும் பிறந்து வந்திருக்கோம்னு இரண்டு பேருமே சொல்லுவாங்க! ஆனா... ஒருத்தன் காலை இன்னொருவன் எப்படி வாரி விடுறது என்று யோசிச்சிக்கிட்டு இருப்பான்.

ஆராயாமல் நட்பு செய்யிறதை விட கெடுதி எதுவும் இல்லையென்று வள்ளுவர் சொல்லியிருக்கார். அது எந்த அளவுக்கு உண்மை என்பது அனுபவிச்சிப் பார்த்தவங்களுக்குத்தான் தெரியும்!

ஒரு காட்டிலே ஒரு ஓநாயும், நரியும் இருந்தது. அதுங்களுக்கு சாப்பிடுறதுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை! ரொம்ப நாளா பட்டினி... இப்படியே எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? ரெண்டும் கூடி யோசனை பண்ணிச்சி!

உழுதுண்டு வாழுறதை விட தொழுதுண்டு வாழுறது சுலபமா இருக்கும் போல தோணிச்சு!

அந்த நேரத்திலே புலி ஒன்று அந்தப் பக்கமா வந்தது. ஓநாயும் நரியும் உடனடியா ஒரு முடிவுக்கு வந்தன அதாவது... அந்த புலியை மெதுவா சிநேகிதம் பிடிச்சிக்கிட்டா என்ன?

அது மாதிரி ஒரு பலசாலி நமக்கு நண்பனா இருந்தா எல்லாம் சுலபமா நடக்குமே!

இது இரண்டும் போயி அந்த புலிகிட்டே சொல்லிச்சு நாம மூணு பேருமே ஒரு தாய் மக்களா இருப்போம் சகோதர பாசத்தோட வாழுவோம்! எந்த இரை கிடைச்சாலும் அதை மூணு பேரும் பங்கு போட்டு சாப்பிடுவோம் என்ன சொல்லுறீங்க என்றது. புலியும் சரி என்றது! அவ்வளவுதான் திடீர்ன்னு மூணும் ஒன்றை ஒன்று கட்டிப்பிடிச்சுக்கிட்டுது.

ஏதாவது இரை கிடைக்குமான்னு மூணும் தேடிக்கிட்டுப் போச்சு! ஒரு மான் குட்டி கண்ணில பட்டுது... மூன்றும் சேர்ந்து குபீர்ன்னு அது மேலே பாய்ந்தன!

இரை கிடைச்சாச்சு! இனிமே பங்கு போடனும் ஓநாய்க்குப் பசி தாங்கலை! வாயை கெட்டியா மூடிக்கிட்டு உட்கார்ந்திருந்தது. புலி அதைப் பார்த்து ஓநாயே! இந்த மானை நம்ம மூணு பேருக்கும் பங்கு கோட்டுக் குடு! என்றது .

சரி என்று ஓநாய் ஒத்துக்கொண்டது! அது சொல்லிச்சு புலியாரே! நீங்க தான் எங்களுக்கு தலைவன்! எஜமான் அதனாலே இந்த மானோட தலை உங்களுக்கு! இந்த நரி வேகமாக ஓடக்கூடியது! அதனாலே மானோட கால் இந்த நரிக்கு! மீதியிருக்கும் உடம்பு! அதை நான் எடுத்துக்கொள்கிறேன்! என்றது.

ஓநாய் இதைச் சொல்லி வாயை மூடவில்லை!

அதுக்குள்ளே புலி அது தலையிலே ஓங்கி 'நங்' என்னு ஒரு அடி குடுத்தது! தாங்க முடியாத வலி! ஓணாய் ஊளையிட்டுக் கொண்டே கீழே உருண்டது. ஏற்கனவே பசிவேற! என்ன செய்யும்! புலி அதுக்கப்புறம் நரி பக்கம் திரும்பி... ''நீ பங்கு போட்டுக்குடு'' என்றது! நரி சரி என்று சொல்லிப்போட்டு எழுந்து நின்றது!

புலியாரே! இந்த மானோட தலை உங்களுக்குத் தான் சேரனும் ஏன் என்ற நீங்க தான் எங்க தலைவர்! மானோட உடம்பும் உங்களுக்குத்தான்!

ஏன் என்ற எங்களை ஒரு தந்தையைப் போல காப்பத்தப் போறது நீங்க தான்!

மானோட காலும் உங்களுக்குத்தான்! ஏன் என்றா எந்த நேரமும் எங்களுக்காக அலைஞ்சி பாடுபடப்போறது நீங்க தான்! அப்படி சொல்லிப்போட்டுது நரி! புலிக்கு சந்தோஷம்!

நரியே! உனக்குத்தான் அறிவு ஜாஸ்தி! நமக்குக் கிடைச்ச இந்த இரையை... பாகுபாடு இல்லாம இவ்வளவு பக்குவமா பங்கு போட நீ எங்கே பாடம் கத்துக்கிட்ட? என்று கேட்டுது!

நரி சொல்லிச்சு எஜமானே! வேறே எங்கேயும் கத்துக்கலை! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஓநாய்க்கு நீங்க பாடம் கற்பிச்சீங்க!

அதை பார்த்துட்டுத்தான் நான் கற்றுக்கொண்டேன்!

நான் இவ்வளவு புத்திசாலியா ஆனதுக்கும் நீங்க தான் காரணம்! அந்தப் பெருமையும் உங்களுக்குத் தான் என்றது!

ஆராயாம நட்பு வைத்துக் கொண்டால் இப்படித்தான் பேச வேண்டி யிருக்கும்! வேறே என்ன செய்யிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேராவில் விவசாய பண்ணையில் இடம்பெற்ற அறுவடை விழா



(கண்டாவளை)

முல்லைத்தீவு தேராவில் பகுதியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பண்ணையில் இம்முறை பெரும் போகத்தின் போது மேற்கொள்ளப்பட்ட உளுந்து. பயறு.கௌபி.நெல் என்பவற்றின் அறுவடை விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத் தின் தேராவில் பகுதியில் சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள மாதிரி விவசாய பண்ணையில் பல்வேறு பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டு வருவதுடன் விவசாய பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையிலே இம் முறை பெரும் போகத்தின் போது 12 ஏக்கர் நிலப்பரப்பில் உளுந்து. பயறு. கௌபி போன்ற சிறுதானியங்களும் 10 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கையும் மேற்கொள் ளப்பட்டுள்ளது. (நி-5-6-315)

## போக்குவரத்துக்கு சிரமமான நிலையில் சுண்டிக்குள கடற்கரை வீதி

(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் கடற்கரைக்குச் செல்லும் பிரதான வீதி ஊடாக போக்குவரத்து மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக பிரதான வீதி மற்றும் உள்ளக வீதி குன்றும் குளியுமாக காணப்படுவதால் மக்கள் பயணிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அவசர சிகிச் சைக்காக நோயாளரை மருத்து வமனைக்கு கொண்டு செல்ல வதற்கு நோயாளர்காவு வண்டி கூட வந்து செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.



இவ்விதியால் பயணிக்கும் பேருந்துகள் தேய்மானம் அடைவதோடு பழுதடைந்து வருவதால் குறித்த சேவையும் தற்பொழுது இடம்பெறுவதிலும்நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த பகுதிக்கு நேரில் வந்து பார்வையிட்டு வீதி புனரமைப்பு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (நி-5-6-316)

## 150 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதி வழங்கிவைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சியில் மக்கள் விடுதலை முன்னணியினால் சீன மக்கள் குடியரசின் நன்கொடையில் உலர் உணவு விநியோக திட்டத்தின் கீழ் 150 பேருக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன

சீன மக்கள் குடியரசின் நன்கொடையின் கீழ் வழங்கப்பட்ட மேற்படி உலருணவு பொருட்கள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு நேற்று கிளிநொச்சிமாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இதில் மக்கள் விடுதலை முன்னணியினுடைய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள்,ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

(நி-5-6-315-316)

## இழுவை மடியில் ஈடுபட்ட ஐந்து மீனவர்கள் கைது

### மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கடற்கரையில் கடந்த திங்கட்கிழமை தடை செய்யப்பட்ட இழுவை மடியை பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட 5 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு பயன் படுத்திய இழுவைப் படகையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எருக்கலம்பிட்டி மற்றும் உப்புக் குளம் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

விடத்தல் தீவு இறங்கு துறையில் இழுவை படகு நிறுத்தப் பட் டுள்ளதோடு, மேலதிக நடவடிக்கைக்காக 5 மீனவர்களும் வலைகளும் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக நடவடிக்கைக்காக மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர். (நி-5-6-250)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3029

**தாரணி**

தக்காளி மாதிரி தான் நம்ம வாழ்க்கையும், எப்படி எல்லாம் மாறுதுல...




முதல்ல Green.. அடுத்து orange அப்புறம் Red.. கடைசில சட்னி தான்.

**கலை**




**நிசாந்தினி**

கணவன்மார்கள் தங்களின் அன்பை மனைவிக்கு விளக்கி சொல்வதை விட...



பாத்திரங்களை "விளக்கி" தந்தாலே போதும், புரிஞ்சிப்பாங்க...

**ஐறின்**

அவ்வளவு தான் இனி இரண்டு மூன்று மாசத்துக்கு எந்த லீவும் கிடையாதாம்



**டெஸ்மி**

என்ன மாப்பிள எப்ப பாத்தாலும் சண்டை போட்டுட்டே இருக்கீங்க..



என்ன பிள்ளை பெத்து வைச்சிருக்கீங்க.. ஊரில எப்படி காத்து அடிக்கிறது என்று கேக்கிறாயா உன் பொண்ணு..

**பிரியா**

உங்க டூத்பேஸ்ட்ல உப்பு இருக்கா..



இத்தனை வருஷம் ஆகியும் இன்னும் குழம்பில இருக்கிற உப்பையே என்னால கண்டுபிடிக்க முடியல இதில நீ வேற

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 394





அவற்றில் நடுநாயகமான யானையின் மேலும் ஓர் அழகிய வேலைப்பாடு அமைந்த பெட்டி இருந்தது. அதன் மேல் தங்கக்குடை கவிந்திருந்தது. சுற்றி நின்ற யானை மீதிருந்தவர்கள் வெண் சாமரங்களை வீசினார்கள். இந்த யானைக் கூட்டத்துக்குப் பின்னாலும் ஆட்டக்காரர்கள் வந்தார்கள். இந்த ஆட்டக்காரர்களுக்கு நடுவில் ரதி, மன்மதன், முக்கண்ணையுடைய சிவபெருமான் வேடம் தரித்தவர்கள் நின்றார்கள். சுற்றி நின்றவர்கள் ஆடிக் குதித்தார்கள்.

"இது என்ன? சிவபெருமான் இங்கு எப்படி வந்தார்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"கஜபாகு என்னும் இலங்கை அரசன் சிவபெருமானை அழைத்து வந்தான். அதற்குப் பிறகு இங்கேயே அவர் பிடிவாதமாக இருக்கிறார்!" என்றார் இளவரசர்.

"ஓ வீர வைஷ்ணவரே! பார்த்தீரா? யார் பெரிய தெய்வம் என்று இப்போது தெரிந்ததா?" என்று வந்தியத்தேவன் கேட்டு முடிவதற்குள் மற்றும் சில யானைகள் அதேமாதிரி அலங்காரங்களுடன் வந்துவிட்டன. அந்த யானைகளுக்குப் பின்னால் வந்த ஆட்டக்காரர்களுக்கு மத்தியில் கருடாழ்வாரைப் போல் மூக்கும் இறக்கைகளும் வைத்துக் கட்டிக் கொண்டிருந்த நடனக்காரர்கள் சுழன்றும், பறந்தும், குதித்தும் மூக்கை ஆட்டியும் ஆர்ப்பாட்டமாக ஆடினார்கள்.

"அப்பனே! பார்த்தாயா? இங்கே கருட வாகனத்தில் எங்கள் திருமாலும் எழுந்தருளியிருக்கிறார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

மீண்டும் ஒரு யானைக் கூட்டம் வந்தது. அதற்குப் பின்னால் வந்த ஆட்டக்காரர்களோ கைகளில் வாள்களும், வேல்களும் ஏந்திப் பயங்கரமான யுத்த நடனம் செய்து கொண்டு வந்தார்கள். தாளத்துக்கும், ஆட்டத்துக்கும் இசைய அவர்கள் கையில் பிடித்த வாள்களும், வேல்களும் ஒன்றோடொன்று 'டணார் டணார்' என்று மோதிச் சப்தித்தன.

இவ்வளவுக்கும் கடைசியாக வந்த யானைக் கூட்டத்துக்குப் பின்னால் ஆட்டக்காரர்கள் அவ்வளவு பேரும் இரண்டு கையிலும் இரண்டு சிலம்புகளை வைத்துக் கொண்டு ஆடினார்கள். அவர்கள் ஆடும்போது அத்தனை சிலம்புகளும் சேர்ந்து 'கலீர் கலீர்' என்று சப்தித்தன. ஒரு சமயம் அவர்கள் நடனம் வெகு உக்கிரமாயிருந்தது. இன்னொரு சமயம் அமைதி பொருந்திய லளித நடனக் கலையாக மாறியது. இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டும், பலவித சப்த விசித்திரங்களைக் கேட்டும் பிரமித்து நின்ற வந்தியத்தேவனுக்கு இளவரசர் இந்த ஊர்வலத் திருவிழாவின் வரலாற்றையும் கருத்தையும் கூறினார்.

தமிழகத்து அரசர்களும் இலங்கை அரசர்களும் நட்புரிமை பாராட்டிய காலங்களும் உண்டு. கடல் சூழ் இலங்கைக் கஜபாகு மன்னனும், சேரன் செங்குட்டுவனும் அவ்விதம் சிநேகமாயிருந்தார்கள். சேரன் செங்குட்டுவன் கண்ணகி என்னும் பத்தினித் தெய்வத்துக்கு விழா நடத்தியபோது கஜபாகு அங்கே சென்றிருந்தான். அந்நாட்டில் நடந்த மற்றத் திருவிழாக்களையும் கண்டு களித்தான். பின்னர் ஒருசமயம் சேரன் செங்குட்டுவன் இலங்கைக்கு வந்திருந்தபோது கஜபாகு மன்னன் விழா நடத்தினான்.

ஆனால் அத்தகைய சமயங்களில் எழுந்த வாத்திய முழக்கங்களைக் கேட்பதற்கோ இரண்டாயிரம் செவிகள் போதமாட்டா! நிச்சயமாக இரண்டு லட்சம் காதுகளேனும் வேண்டும். அப்படியாக உடுக்கைகள், துந்துபிகள், மத்தளங்கள், செப்புத் தாளங்கள், பறைகள், கொம்புகள் எல்லாம் சேர்ந்து முழங்கிக் கேட்போர் காதுகள் செவிடுபடச் செய்தன!

இந்த ஆட்டக்காரர்களும், அவர்களைச் சுற்றி நின்ற கூட்டமும் நகர்ந்ததும், மற்றும் முப்பது யானைகள் முன் போலவே ஜாஜ்வல்யமான ஆபரணங்களுடன் வந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காட்டு மிருகங்களும் நோயும்



காட்டுக்குள்ள ஒரு கொள்ளை நோய் பரவிச்சு.

அதனால நிறைய மிருகங்கள் தேவையில்லாம செத்துப்போச்சு, அதனால சிங்கராஜா தன்னோட சபையைக்கூட்டுனாரு.

அந்த சபைக்கு காட்டுல இருக்குற எல்லா மிருகங்களும் வந்துச்சுங்க.

உடனே சிங்க ராஜா சொல்லுச்சு, இந்த காட்டுக்குள்ள நிறைய பாவம் செய்யுறவங்க இருக்காங்க.

அதனாலதான் இந்த காட்டு தெய்வம் ரொம்ப கோபப்பட்டு நம்மளுக்கு இந்த கொள்ள நோய கொடுத்து இருக்காரு.

அதனால இந்த காட்டுல அதிகம் பாவம் செஞ்சவர கடவுளுக்கு பலி கொடுத்து கடவுளோட கோபத்த தனிக்கனும்னு சொல்லுச்சு.

உடனே எல்லா மிருகங்களும் அதுக்கு சரினு சொல்லுச்சுங்க

அப்ப சிங்க ராஜா சொல்லுச்சு, நான் நிறைய ஆடுகளையும், மாடுகளையும், சின்னச்சின்ன மிருகங்களையும் இரக்கம் இல்லாம அடிச்சி தின்னுருக்கேன் அதனால நான்தான் பெரிய பாவினு சொல்லுச்சு.

உடனே புலி எழுந்திரிச்சி அரசே, நீங்க இரக்கமுடைய அரசராக இருந்தாலும் உங்களுக்கு வேட்டையாடி உணவு உண்ணும் வேலைய கடவுள் கொடுத்திருக்கார், அதனால நீங்க செஞ்சது பாவம் இல்லைனு சொல்லுச்சு.

உடனே சிங்கத்தோட பாவம் மன்னிக்க பட்டுச்சு, தொடர்ந்து புலி சொல்லுச்சு நான் பெரிய பெரிய வரிக்குதிரை, அதோட குட்டி எல்லாத்தையும் தேவையில்லாம கொன்னுருக்கேன் அதனால நான் தான் பாவினு சொல்லுச்சு.

அதுக்கு கரடி எழுந்திரிச்சி, இது பாவம் இல்லை நீங்க அப்படி வரிக்குதிரைகளை கொல்லலைனா அது பெருகி இந்த காட்டையே நாசம் செஞ்சிடும் அந்த ஆபத்தை தடுத்ததால உங்க பாவமும் மன்னிக்கபடுதுனு சொல்லுச்சு.

தொடர்ந்து நான் நிறைய தேனீ சேமிச்சு வச்சிருந்த தேனை திருடி சாப்பிட்டு இருக்கேன் அதனால நான் தான் அந்த பாவி என்ன தூக்குல போடுங்கனு சொல்லுச்சு.

அதுக்கு ஒநாய் சொல்லுச்சு நீங்க தேன் எடுக்கலைனா தேனீக்களே அந்த தேன சாப்பிட்டு முடிக்க முடியாது, அதிகமா இருந்த தேன சாப்பிட்ட உங்க குற்றமும் மண்ணிக்க படுதுனு சொல்லுச்சு.

இப்படியே வலிமைவாய்ந்த மிருகங்களோட குற்றங்களும், பாவங்களும் மன்னிக்கப்பட்டுக்கிட்டே இருந்துச்சு.

அப்பாஒருகழுதைஎழுந்திரிச்சி, நான்எந்த பாவமும் தெரிஞ்சு செய்யிறது இல்ல, ஒருநாள் பக்கத்து கிராமத்து விவசாயியோட வீணா போன புதர்களை கொஞ்சம் தின்னிருக்கேன்னு சொல்லுச்சு.

உடனே எல்லா மிருகங்களும் கோபபட்டுச்சுங்க, அடுத்தவங்களோட பொருளை சாப்பிட்டு ரொம்ப பெரிய பாவத்தை செஞ்ச கழுதையால தான் இந்த நோய் காட்டுக்குள்ள வந்திருக்குனு சொல்லி கத்துச்சுங்க. உடனே அந்த கழுதை தூக்குல போடபட்டுச்சு.

இப்படித்தான் வலிமையான தலைவர்கள் தங்கள் குற்றங்களை பாதுகாத்துக்கிட பொது மக்களோட தவற ஊதி ஊதி பெருசாக்குறாங்கனு தனக்குள்ள சொல்லிகிட்ட குரங்கு தன்னோட வேலைய மட்டும் பார்க்க ஆரம்பிச்சுச்சு.

நீதி :- வலிமை மிக்கவர்களின் தீய செயல்களால் பலவீனமானவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான கண்ணோட்டம் மனதைத் திறந்து புதிய சாதனைகள் புரியும் புத்துணர்வை தருகிறது.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

## போதைவஸ்து வியாபாரத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும்

நாட்டில் பரந்து கிடக்கும் போதைவஸ்து வியாபாரத்தை ஒழிப்பதில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தீவிரமாகச் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது, போதைப்பொருள் வர்த்தகத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார்.

எனினும் அன்றைய சூழலில் அரச தரப்பிலும் படைத்தரப்பிலும் அவருக்குப் போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.

தவிர, தான் எடுத்த திட்டத்தை நிறைவேற்றுகின்ற செயற்றிறனும் மைத்திரிபால சிறிசேனவிடம் மந்தமாக இருந்ததன் காரணமாக அவர் முன்னெடுத்த போதை ஒழிப்புத் திட்டம் இடைநடுவில் நின்று போனது.

இப்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் போதை வியாபாரிகளைக் கைது செய்வதில் தீவிரம் காட்டி வருவது உண்மையில் பாராட்டுக்குரியது.

ஆம், இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்து போவதற்கு மூலகாரணமாக போதைப் பொருள் வர்த்தகமே இருந்துள்ளது.

அந்தவகையில் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமாக இருக்கின்ற இந்நிலையில், இங்கு பரவியுள்ள போதை வியாபாரம் விஸ்வரூபமெடுக்குமாயின் அதன் பின்னர் அதனை கட்டுப்படுத்த முடியாததென்றாகிவிடும்.

எனவே இலங்கை முழுவதிலும் இருக்கக் கூடிய போதை வர்த்தகத்தை அடியோடு ஒழித்து நாட்டையும் மக்களையும் பாதுகாப்பது அவசியமாகிறது.

இதுவிடயத்தில் எதிர்க்கட்சிகள், படைத்தரப்பினர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்குவது அவரவரின் தார்மீகக் கடமையாகும்.

இருந்தும் போதை வியாபாரிகளைக் கைது செய்வதை சில அரசியல்வாதிகளும் படைத்தரப்பும் சில வெளிநாடுகளும் விரும்பவில்லை என்பது தெரிகிறது.

ஆம், யுக்திய நடவடிக்கையை நிறுத்துமாறு சர்வதேச அழுத்தம் தமக்கு இருப்பதாக அமைச்சர் டிரான் அலஸ் பகிரங்கமாகக் கூறியிருப்பது குறித்து நாம் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

பொதுவில் இலங்கை ஏழ்மையில் இருப்பதை சில நாடுகள் விரும்புகின்றன. இவ்வாறானவர்கள் தங்களின் விருப்பத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு இலங்கையில் சாதகமான சூழ்நிலை உண்டு.

அதாவது மதத்தாலும் மொழியாலும் இலங்கைத் தீவு சின்னாபின்னப்பட்டு கிடக்கிறது.

இலங்கைத் திருநாடு பௌத்த சிங்களவர்களுக்குரியதென்ற செருக்குத்தனங்கள் இலங்கைக்குள் பகைமையையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான சூழமைவு இலங்கையில் போதை வர்த்தகத்துக்கான சந்தை வாய்ப்பை உருவாக்கியுள்ளது எனலாம்.

உள்நாட்டு யுத்தம் நாட்டைச் சீரழித்துவிட, வேலையற்ற இளைஞர் படை தமது பொன்னான நேரத்தை வீணே கழிக்கின்றன.

தவிர, பொலிஸார் மற்றும் முப்படையினரும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவதையே தம் பணியாகக் கொண்டுள்ளனர்.

இந்த நிலைமைகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட போதைப்பொருள் வர்த்தகர்கள்; தமக்கு உதவக்கூடிய பொலிஸார், அரசியல்வாதிகள், மதகுருமார் ஆகியோரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டு தங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்தியுள்ளனர். இதன் முடிவு எங்கள் வருங்காலச் சந்த தியை நிர்மூலமாக்குவதாகும்.

எனவே போதை ஒழிப்புக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது கட்டாயமானதாகும்.

# சுற்றுலா செல்ல விரும்பினால் இலங்கைக்கு செல்லுங்கள்

## இந்திய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

உங்களுக்கு எனது முதல் அறிவுரை, அடுத்த முறை நீங்கள் விடுமுறை எடுக்க விரும்பினால், இலங்கைக்குச் செல்லுங்கள். நான் தீவிரமாக இருக்கிறேன். தயவு செய்து இலங்கைக்கு செல்லுங்கள். இதை நான் உங்கள் அனைவருக்கும் கூறுகிறேன் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்தியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை இந்தியா வழங்கிய உதவிகளை சுட்டிக்காட்டியுள்ளதுடன் இந்தியா குறித்த சாதகமான உணர்வுகளை இந்தியர்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் இந்த உதவிகள் முக்கிய பங்களிப்பை செய்துள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

"நான் இலங்கைக்கு விஜயம் செய்தேன், எரிபொருள் வரிசைகள் மற்றும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையை நேரில் பார்த்தேன். இந்த நேரத்தில் முன்னோக்கி வந்த ஒரே நாடு இந்தியா" என்று அவர் கூறினார்.

இதன்போது, இலங்கைக்கு உதவுவதற்காக இந்தியா 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

சர்வதேச நாணயநிதியம் வழங்கியதை விட ஐம்பதுவீதம் அதிகமாக உடனடியாக இந்தியா இலங்கைக்கு உதவிகளை வழங்கியது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## மாலைதீவு - இலங்கை விமான சேவை

### மார்ச் முதல் ஆரம்பம்

(கொழும்பு)

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவை மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சகம் அறிவித்துள்ளது.

மாலைதீவு போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் கப்டன் மொஹமட் அமீனுக்கும், பொறுப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

மாலைதீவில் வசிக்கும் மக்கள் இலங்கைக்கு விரைந்து வந்து விபத்துக்கள் மற்றும் நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இந்த ஏர் அம்புலன்ஸ் சேவையை ஆரம்பிக்கக் காரணம் எனவும் மாலைதீவு விமானப் போக்குவரத்து அமைச்சர், தற்போது வரை, அதன் குடிமக்கள் அவசர சிகிச்சைக்காக இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டாலும், இந்த நாட்டில் தற்போதுள்ள அவசர சிகிச்சையின் தரத்தை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

## பெலியத்தை படுகொலை மேலும் மூவர் கைது

(கொழும்பு)

பெலியத்தையில் ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு உதவிய மேலும் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹுங்கம பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன்,

அன்றைய தினம் மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் மேலும் ஒரு சந்தேக நபரை மாத்தறையில் வைத்து கைது செய்தனர்.

நீர்கொழும்பு, அலவ்வ மற்றும் புஸ்ஸ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 28, 42 மற்றும் 58 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள், படுகொலை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட T-56 துப்பாக்கிகளை அப்புறப் படுத்தியதற்காகவும்,

குற்றச் செயல்களின் போது பணப் பரிவர்த்தனைகளை மேற்கொண்டதற்காகவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெலியத்தை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன்,

கொலைகளுக்காக துப்பாக்கிகளை கொண்டு சென்ற குற்றத்திற்காக முன்னதாக இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளேன்

### ரொஷான் ரணசிங்க

தனது 65 வயதுக்கு முன்னர் அரசியலை விட்டு வெளியேறி நாட்டுக்கு புதிய முன்னுதாரணமாக விளங்கத் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அரச சேவையில் ஓய்வு பெறுவதற்கான வரம்பு நிர்வாகத்திற்கும் செல்லுபடியாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுகேகொட பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

என்றாவது ஒரு நாள் என் கண் பார்வை குறையும் ஒரு நாள் என் செவித்திறன் குறையும். ஆனால் அதுதான் நிதர்சனம். அரசுப் பணியில் இருந்து 60 வயதில் ஓய்வு பெறுவது ஏன்? நீதிபதியும் 65 ஆண்டுகள் பணியாற்றலாம். ஒரு ஆளுநருக்கு 80 வயது இருக்கும் போது, கடந்த கால வரலாற்றில், அவருக்கு வேலை செய்ய நல்ல மனம் இருக்கிறதா? எமது அரசியல் வாழ்க்கையில் நாங்கள் முன்னுதாரணமாக இருக்கிறோம், 65 ஆண்டுகளுக்கு முன்பே அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தயார். இங்குள்ள அனைவரும் அப்படித்தான். அதற்கு முன்னுதாரணமாக இருக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார். (ம)

## இலங்கை தேசிய கொடியை அவமதிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை

தேசிய கொடியை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அவற்றை கண்காணிப்பதற்கு தனிக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் தேசபந்து தென்னகோன் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு காலிமுகத்திடல் வீதி முழுமையாக மூடப்படவுள்ளதுடன், எதிர்வரும் பெப்ரவரி 3 ஆம் திகதி பகல் 2 மணி முதல் 4 ஆம் திகதி பகல் 12 மணி வரை குறித்த வீதி முழுமையாக மூடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்திய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

13

தங்கள் அஞ்சா நெஞ்சத்தினாலும், வில்லியம் என்பவனுடைய போர்த்திறனாலும், தங்களுக்கிருந்த ஓரளவு கடல் ஆதிக்கத்தினாலும் ஒல்லாந்தர் தங்கள் எதிரியைப் புற முதுகு காட்டி ஓடச் செய்தனர்.

கி. பி. 1584ஆம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டுப் பேரரசன் தூண்டுதலினால் ஒல்லாந்தருக்கு வாழ்வளித்த வில்லியம் கொலைசெய்யப்பட்டான். அதன்பின் வில்லியத்தின் மகன் போர்க்கோலம் பூண்டு தலைமை தாங்கிச் சேனைகளை நடத்திச்சென்று ஸ்பெயின் நாட்டுப் படைகளை முறியடித்தான். இத்தோல்வியானது ஸ்பெயின் நாட்டின் செல்வாக்குக்குப் பங்கம் விளைத்தது. மேலும் 1588 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆர்மேடா என்னும் ஸ்பெயின் நாட்டுக் கப்பற்படையைக் கைப்பற்றிச் சிதறடித்தனர். இக்காரணத்தால் அந்நிய நாட்டுடன் ஸ்பெயின் நாட்டவர் செய்துவந்த வியாபாரம் தடைப்பட்டது.

அவ் வியாபாரத்தைக் கெடுக்க ஒல்லாந்துக் கப்பல்கள் கங்கணங் கட்டின. இக்காரணங்களால் ஸ்பெயினுக்கும் ஒல்லாந்தருக்கும் ஒரு சேர்வுடன்படிக்கை 1609 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. 1648 ஆம் ஆண்டிலிருந்து ஒல்லாந்து நாடானது ஒரு தனிச் சுதந்திர நாடாக விளங்கியது.

16 ஆம் நூற்றண்டில் கப்பல் வர்த்தகத்திற்குக் கேந்திரஸ்தானமாக ஆம்ஸ்டர்டாம் என்னும் பட்டினம் இருந்து வந்தது. நூற்றுக்கணக்கான கப்பல்கள் அத்துறைமுகப்பட்டினத்திற்கு வந்துபோயின. அக்காலத்திற் கிழக்குத் தேசங்களுடன் வர்த்தகப் போக்குவரவு செய்வதற்காகப் பல வியாபாரக் கொம்பணிகள் நிறுவப்பட்டன.

17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டச்சுக்குடியரசு ஐரோப்பிய நாடுகளிடையே வாணிப திறன் மிக்க சக்திகளில் ஒன்றாக உருவாகியது. டச்சு துணிச்சலான கடற் பயணத்தைத் தெரியாத கடலிற்கும் நிலத்திற்கும் மேற்கொண்டு சிறப்புப் பெற்றது.

1602 இல் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனி அல்லது ஐக்கிய டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனி உருவாக்கப்பட்டது. சில தசாப்தங்களில் இது பரந்தளவிலான இடங்களை தென்னாபிரிக்கா, இலங்கை, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் கட்டுப்படுத்தி, குறிப்பிடத்தக்கக் குடியிருப்புக்களை இந்தியா, மலேசியா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளில் உருவாக்கியது.

### இலங்கையில் ஒல்லாந்தர்

17 ஆம் நூற்றாண்டில் கண்டி இராச்சியத்தின் அரசர்கள் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்த்தை ஒடுக்க, அவர்களின் பகைவர்களான டச்சுக்காரரின் உதவியை வேண்டினர். கண்டியின் முதல்அரசனான விமலதர்மசூரியனின் அழைப்பை ஆர்வத்துடன் ஏற்ற டச்சுக் காரர், 1602 இல் முதன் முதலாக இலங்கையை வந்தடைந்தனர். ஸ்பில்பேகன் என்ற கப்பற்றளபதி கண்டியரசனைச் சந்தித்து ஒல்லாந்தரின் நட்பையும் அவர்கள் அவனுக்கு எந்நேரமும் உதவிபுரிய ஆயத்தமாக இருப்பதையும் தெரிவித்து நின்றான்.

கப்பலுக்குத் திரும்பிய பொழுது அவன் அரசனின் ஆட்புலங்களில் எப்பகுதியிலேனும் ஒரு கோட்டையை அமைப்பதற்கு அனுமதியும் பெற்றுக் கொண்டான். 1612 இல் கொட்டியாரத்தில் ஒல்லாந்தரின் கோட்டை அமைக்கப்பட்டதைக் கண்டு அஞ்சிய போர்த்துக்கேயர், அதனை உடனே அழித்து விட்டனர். அடுத்த 30 ஆண்டுகளில் மூன்று அரசர்கள் கண்டியின் சிம்மாசனத்தில் அமர்ந்தனர்.

அவர்களுள் கடைசி அரசனான இராசசிங்கன், ஒரு வலிமை பொருந்திய கடல் வல்லரசின் உதவியின்றிப் போர்த்துக்கேயரின் ஆட்சியை முறியடிப்பது கடினம் என்றுணர்ந்து, ஒல்லாந்தரின் உதவியைப் பெறத் திட்டமிட்டான். இராசசிங்கன் பத்தேவியா (இன்றைய ஜக்கார்த்தா)வுக்குத் தூதனுப்பி ஒல்லாந்தரின் உதவியை வேண்டி நின்றான். ஒல்லாந்தரும் இராசசிங்கனின் வேண்டுகோளுக்கு இசைந்து, 1638 இல் வெஸ்றர்வோல்ட் என்னும் கப்பற் தலைவனை ஒரு கடற்படையுடன் இலங்கைக்கு அனுப்பிவைத்தனர். மே 23 ஆம் நாள் வெஸ்றர்வோல்ட் இராசசிங்கனுடன் மிகவும் சாதகமான ஒப்பந்தம் ஒன்றினை எழுதினான். இவ்வொப்பந்தத்தினால் இராசசிங்கன் பிற ஐரோப்பிய அரசுகளுடன் அரசியல், பொருளாதாரத் தொடர்புகள் வைத்திருக்கும் உரிமையைத் தானாகவே கைவிட்டதுமன்றி, ஒல்லாந்தரைத் தன் நிரந்தரக் காப்பாளராகவும் ஏற்றுக் கொண்டான்.

### ஒல்லாந்தர்போர்த்துக்கேயரின் கோட்டைகளை கைப்பற்றல்

இதன் பின்பு ஒல்லாந்தர், இராசசிங்கனின் அனுசரணையுடன், போர்த்துக்கேயரின் கோட்டைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கினர். கிழக்கிலங்கையில் போர்த்துக்கேயரின் இரு முக்கிய கோட்டைகளான மட்டக்களப்புடன் திருகோணமலையும் 1639 இல் வெற்றி கொள்ளப்பட்டன. 1640 இல் நீர்கொழும்பு, மாத்தறை, காலி மாநிலங்களும் ஒல்லாந்தருக்கு அடிபணிந்தன. 1644 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே ஏற்பட்ட அமைதி காரணமாக இலங்கையில் போர் நிலை நிறுத்தப்பட்டது.

1652 இல் மீண்டும் பகைமை மூண்டது. 1658 மே 12 இல் கொழும்பும், 1658 யூன் 24 இல் யாழ்ப்பாணமும் சரணடைந்தன. போர்த்துக்கேயர் ஆட்சியும் முடிவுற்றது.

ஒல்லாந்தர் வெற்றிகொண்ட மாநிலங்களைத் தனக்கே கையளிப்பர் என எண்ணிய இராசசிங்கன் பெரும் ஏமாற்றமடைந்தான். அவர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் படி ஒல்லாந்தர், போர்த்துக்கேயரைத் துரத்தியபின்பு ஒரு கோட்டையை மாத்திரமே வைத்திருக்கலாமென்றும், அவர்கள் கைப்பற்றிய ஏனைய கோட்டைகள், இராசசிங்கன் போரின் முழுச் செலவையும் இறுத்தபின் அவனிடம் ஒப்படைக்கப்படுமென்றும் கூறிற்று.

1641 இல், 310,790 வெள்ளிகளாக அதிகரித்திருந்த கடனை இராசசிங்கன் தீர்க்கும் நிலையிலில்லை. ஒல்லாந்தரைக் கருவியாக உபயோகித்துத் தன் நோக்கத்தை நிறைவேற்ற எண்ணிய இராசசிங்கன், ஈற்றில் அவர்களுடைய சூழ்ச்சிக்குப் பலியானான். ஒல்லாந்தர் தமது இலட்சியத்தையடைய இராசசிங்கனை ஒரு கருவியாக உபயோகித்தார்களேயன்றி அவன் ஆணைப்படி நடக்க வரவில்லை. இராசசிங்கனின் நாமத்தைக் கொண்டு போர்த்துக்கேயரைத் துரத்த ஆரம்பித்த ஒல்லாந்தர், வெகுவிரைவில் அப்போலிச் சாட்டைக் கைவிட்டு, தாம் கைப்பற்றிய கரையோர மாநிலங்கள் மேல் ஏகபோக உரிமைகளையும் பாராட்டினர்.

ஆரம்பத்திலேயே எழுந்த இத்தகராறு, பிற்காலத்தில் கண்டி மன்னரினதும், ஒல்லாந்தரினதும் உறவுகளை வெகுவாகப் பாதித்தது. ஒல்லாந்தர், கரையோர மாநிலங்களைத் தாமே போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றியபடியால் அவற்றைத் தாம் வைத்திருக்க உரிமையுடையவர்கள் எனப் பிடிவாதம் செய்தனர். ஆனால் கண்டியரசர்கள், ஒல்லாந்தர், தம் பெயரில் வெற்றி கொண்ட மாநிலங்களின் பாதுகாவலர் மாத்திரமே என்ற நிலையை உறுதியாகக் கடைப்பிடித்தனர். இவ்வுறுதிகளில் வியாபாரமே தலையான இடத்தை வகித்தது. வியாபாரத்தை விரும்பிய ஒல்லாந்தர் அமைதிநிலையையே நாடினர். இலங்கையிலிருந்து பெறப்பட்ட அதி முக்கியமான வணிகப் பொருளான கறுவாவைக் கண்டியரசனின் இராச்சியத்திலேயே நியாயமான அளவில் பெறமுடிந்தது. ஒல்லாந்தர் அதி விசாலமான வர்த்தகத்தையும் நிறைந்த இலாபத்தையும் பெறுவதற்குக் காரணமாயிருந்த பாக்கும் அவனது இராச்சியத்திலேயே கிடைத்தது. எனவே தன் இராச்சியத்தின் எல்லைகளை ஒல்லாந்தருக்கு மூடிவிடும் உபாயம் அரசனின் கைகளில் ஒரு வலிமை படைத்த ஆயுதமாயிற்று.

மறுபுறம் கண்டி இராச்சியத்தின் வியாபாரத் துறைமுகங்களான புத்தளம், சிலாபம், கொட்டியாரம் என்பவற்றை மூடி, கண்டியின் வியாபாரத்தை அழிக்கும் சக்தி ஒல்லாந்தர் கைகளிலிருந்தது. கரையோர மாநிலங்களின் மேல் ஆதிக்கமும், கடல் வலிமையும் படைத்த ஒல்லாந்தர் திருகோணமலை, மட்டக்களப்பு, கற்பிட்டி எனும் துறைமுகங்களைத் தம் கைகளில் வைத்திருந்தமையினால் கண்டியரசனை எந்நேரமும் அச்சுறுத்த முடிந்தது. மேலும் ஒல்லாந்தர், இந்தியாவில் கொண்ட நிலையின் பேறாக, கண்டியரசன் வியாபாரம் செய்த மதுரை, மலையாளம் எனும் பிரதான மாநிலங்களின் கரைகளையும் மூடிவிட முடிந்தது. இவ்விதமான நிலை பேறற்ற அமைதி, 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையும் நீடித்தது.

1739 இல் நாயக்க வம்சத்தைச் சேர்ந்த சிறீவிஜய இராசசிங்கன், கண்டியின் சிம்மாசனத்தில் அமர்ந்த பின்னர் அமைதி குலைந்து வெளியரங்கமான பகைமை வளரத் தொடங்கிற்று. அவன் தென் இந்தியாவில் பெற்ற அனுபவங்களின் பயனாக, ஒல்லாந்தர் வியாபாரத்தில் கொள்ளை இலாபம் சம்பாதிப்பதை அனுமதிக்க ஆயத்தமாக இருக்கவில்லை. தவிரவும், இந்தியாவில் நாயக்கர் ஆங்கிலேயருடன் நட்புக்கொண்டிருந்தமையினால், தேவையேற்படின் ஆங்கிலேயரின் உதவியையும் பெறலாமென எண்ணினான். புது அரச வம்சத்தினர் சிம்மாசனத்தில் அமர்ந்தபின் கண்டிக்கும் ஒல்லாந்தருக்குமிடையே நிலவிய உறவுகள் படிப்படியாகக் கீழ் நிலையை அடைந்தன.

### கரையோர மாநிலங்களில் கலகம்

ஈற்றில் 1761 ஆம் ஆண்டு பகைமை போராக மாறியது. அவ்வாண்டு ஒல்லாந்தரின் கரையோர மாநிலங்களில் பாரதூரமான கலகம் மூண்டது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி...

சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு அழைப்பாணை விடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2018இல், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராகப் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கியதற்கு எதிராக இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அடிப்படை மனித உரிமை மனு மீதான விசாரணையை மேற்கொள்ள உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் நீதிமன்றத்தில் சாட்சியளிக்குமாறு அந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு அழைப்பாணை விடுக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

## பணவீக்கம்...

வித்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் தரவுகளின்படி டிசம்பர் 2023 இல் பணவீக்கம் 4% ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதற்கிடையில், 2024 ஜனவரியில் உணவுப் பணவீக்கம் 3.3% ஆக உயர்ந்தது. அது டிசம்பர் 2023 இல் 0.3% ஆக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



















## மோ.சைக்கிள்...

உயிரிழந்தவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளை அதிவேகமாக செலுத்தி சென்றபோது வளைவு ஒன்றில் வேலித் தூணுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்து மயக்கம் அடைந்த நிலையில் காணப்பட்ட குறித்த இளைஞன் இரவு 10.30 மணி அளவில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மறுநாள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-33,60)

## அமைச்சர்...

சாந்தனை நாட்டிற்கு அழைத்து வருவது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு சில தினங்களுக்குள் பதிலை பெற்றுத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

குறித்த வழக்கின் தீர்ப்பில் இருந்து விடுதலை செய்யப்பட்ட சாந்தன் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில்,

அவரின் தாய் மற்றும் சகோதரர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று முன்தினம் சந்தித்து, சாந்தன் நாட்டிற்கு வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர்.

இதன்போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் குறித்த உறுதிமொழி வழங்கப்பட்டது. (ம)

## இளம் குடும்...

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு உறக்கத்துக்கு சென்றவர் நேற்று புதன்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அவர் அசைவற்று இருப்பதைக்கண்ட மனைவி அவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-33,60)

## 2 ஆயிரத்துக்கு...

வைத்து 26 வயதுடைய ஒருவரே நேற்று கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரேமதிலக தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ம)

## தமிழரசுக்...

கும் விமர்சனங்களுக்கும் அது முற்றுப்புள்ளி வைக்கும். ஆகவே தயவு செய்து காலம் தாழ்த்தாது வெகுவிரைவில் அந்தப் பகிரங்கப் பொது நிகழ்வை நடத்துமாறும் அன்புரிமையோடு நான் கேட்டுக்கொள்கின்றேன்'' என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## பல்கலைக்கழக...

கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டனர்.

வாழ்க்கைச் செலவுக்கு ஈடு கொடுக்க முடியாது", "உணவுப் பொருட்களின் விலை உடனடியாக குறையும்", உணவகங்களுக்கான வசதிகளை விரிவுபடுத்துதல்", "குடியிருப்பு வசதிகள் மற்றும் புதிய விடுதிகள் கட்டுதல்", "பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்", "சமூக ஒடுக்குமுறைச் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்", "அடக்குமுறையை நிறுத்துங்கள்"," பல்கலைக்கழகங்களில் தன்னிச்சையாக வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை உடனடியாக ரத்து செய்" உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.(ம)

## மண்...

ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அதன் புதிய விலை 371 ரூபாயாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின்விலை, 5 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன்அதன் புதிய விலை 363 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 26 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 262 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின்விலை 8 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன்அதன் புதிய விலை 456 ரூபாயாகும்.

அத்துடன், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 7 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 468 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ம)

## பொருளாதார...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றி கொள்ள புத்தபெருமானின் போதனைகள் மிக முக்கியமானது. அத்தகைய தர்மத்தின் ஆழத்தை அறிந்து அதனை உலகிற்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தேரவாத பௌத்தத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் இலங்கையைச் சார்ந்துள்ளது .

தொழில்நுட்ப யுகம் ஒரே இடத்தில் ஸ்தம்பித்து நிற்காது. வரலாற்றில் இருந்த அணுகுமுறைகள் இன்று வேறுவிதமாக வளர்ச்சியடைந்துள்ளன என ஜனாதிபதி தெரிவித்தார்.(ம)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TECHNA
Technical Institute
Smart thinking leads to innovate

A/L 2023 பிரிவு
க.பொ.த உயர்தர தொழினுட்பப்பிரிவு

இலவச செயன்முறை வகுப்புக்கள்

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

M.விஷ்ணு P.நிரோஜனன்

இறுதிச் செயன்முறைப் பரீட்சை வரையான காலப்பகுதி முழுவதும் அனைத்து செயன்முறைகளும் தொடர்ச்சியாக இலவசமாக நடைபெறும். (18831)

ஆரம்பம் ; 01.02.2024, வியாழன் மாலை 3.00 மணிக்கு

B1, B2, SPOT செயன்முறைகள் பூரணமாக பயிற்றுவிக்கப்பட்டதன் பின்னர் செயன்முறை பரீட்சைகளும் நடைபெறும். குழு அடிப்படையில் நடைபெறுவதால் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் நேர வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும். வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளுக்கான தொடர்புகள் ஏற்படுத்தி தரப்படும்.

A/L 2024 உயிர் முறைமைகள் தொழினுட்பப்பிரிவு மாணவர்களுக்குரிய 12ஆம், 13ஆம் ஆண்டு பாடத்திட்டத்திற்குரிய 4ஆம் தவணை வரைக்குமான அனைத்து செயன்முறைகளும் இலவசமாக செய்து காட்டப்பட்டு பின்னர் தனித்தனியே செய்து பார்ப்பதற்கு அனுமதிக்கப்படும்.

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம். 077 170 3549 Technatechnicalinstitute


# கடவுச்சீட்டு கட்டணம் இரு மடங்காக உயர்வு

(கொழும்பு)

சாதாரண கடவுச்சீட்டு சேவைகளுக்கான கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்படும் என இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடவுச் சீட்டு விண்ணப்பங்களுக்கான கட்டணம் 5,000 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டு 10, ஆயிரம் ரூபாயாக அறவிடப்படவுள்ளது. (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18802)

076 825 7716 (ஆகாஸ்)

மாடி வீடு விற்பனைக்கு

கிழக்கு கோண்டாவிலில் புதிதாக கட்டப்பட்ட 1 1/2 பரப்பில் அமைந்த அமைதியான சூழலில் உள்ள புதிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
(விலை 5 கோடிக்கு மேல் எதிர்பார்க்கப்படுகின்றது)
தொடர்புகளுக்கு
076 742 4301
075 742 1612
(18824)

IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18839)

TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு
செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்
- பொறியியல் தொழில்நுட்பம்
- உயிர்முறைகள் தொழில்நுட்பம்


ஆரம்பம் : 04.02.2024
ஞாயிற்றுக்கிழமை - காலை 9.00 மணி
நவீன ஆய்வுகூட வசதிகளுடன் மற்றும் அனுபவம் மிக்க ஆசிரியர் குழாமுடன்
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)
Phone No: 077 017 5346
(C-8254)

வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனம் ஒன்றின் நெல்லியடி, பருத்தித்துறை கிளைகளுக்கான வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. A/L இல் மூன்று பாடங்களில் சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
077 803 9320
075 269 0188
(18822)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8255)


# கண்ணீர் அஞ்சலி



அமரர் **கார்த்திகேசு செல்லத்துரை**

(உரிமையாளர் - சோபனா நகை மாளிகை)

தோற்றம் 14.02.1951 | மறைவு : 30.01.2024

மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து விட்டாலும்
நினைவுகள் எங்கள் இதயத்தில் இருந்து ஒருபோதும்
மறைவதில்லை.. பாசமான நினைவுகளை எம்மிடம் விட்டு
சென்றீர் ஐயாவே.!! உங்கள் ஆத்மா
இறையின் பாதங்களில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!! சாந்தி! சாந்தி!!

பிரிவால் துயருறும் : உரிமையாளர், ஊழியர்கள்

**NSR ஜுவல்லர்ஸ்**
இல.131. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிறிநதியா நகை மாளிகை**
இல.01. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-8256)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org